ஊடகச் சந்திப்பு 15.12.2021

**இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் புகையிலை வரி அதிகரிப்பானது, மிகவும் பலவீனமான முறையிலும், நாட்டிற்கு நஷ்டத்தை ஏற்படுத்தும் வகையிலும், பன்னாட்டு புகையிலை நிறுவனங்களை பணக்காரர்களாக்கும், அபிவிருத்தியடைந்த நாடுகள் ஒருபோதும் பின்பற்றாத பிழையான தீர்மானமாகும்.**

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சிகரெட் ஒன்றின் விலை 5 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இந்த அதிகரிப்பு காரணமாக இலங்கையில் அதிகம் விற்பனையாகும் சிகரெட் ஒன்றின் விலை ஐந்து ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதில் 3.50 ரூபாய் மட்டுமே அரசு வரியாக வசூலித்துள்ளது. மீதமுள்ள 1.50 ரூபாயை பிரித்தானிய அமெரிக்க புகையிலை நிறுவனத்திற்கு (BAT) நன்கொடையாக வழங்கியுள்ளது.

இதனை போன்று, சிகரெட் ஒன்றிற்கு 1.50 ரூபாய் நிறுவனத்திற்கு வழங்கப்படுவதால் 2022 ஆம் ஆண்டில் சிகரெட் நிறுவனத்தின் இலாபம் சுமார் 2.4 பில்லியன் ரூபாவால் அதிகரிக்கும், இவ்வருமானமானது அரசாங்கத்தினால் வரி வருவாயாக வசூலிக்க வேண்டிய தொகையாகும்.

மூன்று வருடங்களாக அதிகரிக்கப்படாமல் இருந்த சிகரெட் வரியை, 3.50 ரூபாவினால் அதிகரிக்காமல் குறைந்தபட்சம் 10 ரூபாவினால் அல்லது அதற்கு மேல் அதிகரிக்கப்பட்டிருந்தால், அரசாங்கத்திற்கு 23 பில்லியன் ரூபா வரி வருமானமாகப் பெற்றுக்கொள்ள முடியும். இலங்கை புகையிலை நிறுவனம் (CTC) என்பது பிரித்தானிய அமெரிக்க புகையிலை நிறுவனத்திற்கு (BAT) சொந்தமான ஒரு பன்னாட்டு நிறுவனமாகும், இது 84வீதமான பங்குகளை கொண்டுள்ளது. எனவே, ஒரு அரசாங்கம் செய்ய வேண்டியது என்னவென்றால், நாட்டிற்கு வெளியே பணத்தை எடுத்துச் செல்லும் இதுபோன்ற நிறுவனங்களின் உற்பத்தி பொருட்களுக்கு அதிகபட்ச வரிகளை விதித்து, எப்படியாவது நாட்டில் பணம் வெளியேறாமல் இருக்க சரியான வரிக் கொள்கையை உருவாக்க வேண்டும். ஒரு பன்னாட்டு நிறுவனத்திற்கு ஆதரவாக முடிவுகளை எடுப்பது மிகவும் சந்தேகத்திற்குரியது. குறிப்பாக நாட்டுக்கு பணம் தேவைப்படும் போது இவ்வாறான முடிவுகள் எடுக்கப்படுமா என்பது சந்தேகமே.

3 வருடங்களில் சிகரெட் வரி அதிகரிப்பு இல்லாத நீளத்தில் குறைந்த சிகரெட்டுகளுக்கான வரி விகிதம் ஏற்கனவே இருந்த வரி வீதத்திலிருந்து 49வீதமாக தற்போதைய வரவு செலவுத் திட்டத்தில் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி, 20 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் சிகரெட் ஒன்றின் சந்தை விலை 10 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. இது பாடசாலை மாணவர்கள் மற்றும் சிறுவர்கள் சிகரட் பாவனைக்கு பழகுவதற்கான பிரதான காரணியாக அமையும். அதே போன்று, குறைந்த வருமானம் பெறுபவர்களின் சிகரெட் பயன்பாட்டையும் அதிகரிக்கும். குறைந்த வருமானம் உள்ளவர்களையும, பிள்ளைகளையுமு் மலிவான சிகரெட்டுகளுக்கு ஈர்ப்பது உலகெங்கிலும் உள்ள புகையிலை நிறுவனங்களின் சூழ்ச்சியாகும். இது போன்ற நயவஞ்சக யுக்திகளுக்கு துணைபோகும் வரிக் கொள்கை நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுவது ஆச்சரியமாக உள்ளது.

பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட முறையான சிகரெட் வரி விதிப்பு இலங்கையில் இன்னும் இல்லை. தற்போதுள்ள சிகரெட் நீளத்திற்கு வரி விதிக்கும் சிக்கலான முறையை நீக்கி, அறிவியல் பூர்வமாக எளிமைப்படுத்தப்பட்ட வரிக் கொள்கையை அறிமுகப்படுத்துவதன் மூலம், சிகரெட் மீது அதிகபட்ச வரி விதிக்கப்பட்டு, அரசாங்கத்தின் இலாபத்தை அதிகரிக்க முடியும். சிகரெட் தொழில் முறைகேடான இலாபம் ஈட்டுவதைத் தடுக்கவும் முடியும். அன்றைய நிதியமைச்சரும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ 2021 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட உரையில் “வரிக் கொள்கை“ என்ற தலைப்பில் இவ்வாறான திறமையான முறை அறிமுகப்படுத்தப்படும் என தெரிவித்திருந்த போதிலும், நிதியமைச்சு வேண்டுமென்றே 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட முன்மொழிவு வரை இப்பொறுப்பை புறக்கணித்துள்ளது.

மேலும், உலக சுகாதார அமைப்பின் (WHO) பரிந்துரைகளின்படி, சிகரெட் மற்றும் புகையிலை பொருட்கள் மீதான வரிகளை கணிசமாக அதிகரிப்பதே சிகரெட் பயன்பாட்டைக் கட்டுப்படுத்த சிறந்த வழியாகும். (உலக சுகாதார ஸ்தாபனம் WHO / NMH / PND / 14.2) சாதாரணமாக சிகரெட் வரியை 10வீதமாக உயர்த்தும் போது அரசாங்கத்தின் வரி வருவாய் அதிகரிக்கும், மற்றும் எமது நாட்டை போன்று அபிவிருத்தியழடந்து வரும் நாடுகளில் சிகரெட் நுகர்வு 5வீதத்தால் குறைவடையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் சிகரெட் பயன்பாட்டைக் குறைப்பது கோவிட்-19 கட்டுப்பாட்டு செயல்முறைக்கும் மிகவும் உதவியாக இருக்கும் என அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம்